திரு. எஸ். வடிவேல் : தஞ்சை மாவட்டத்தில் விவசாயம் பிரதானமாக இருக்கிற காரணத்தினல் அங்கே ஒரு விவசாயக் கல்லூரியை ஏற்படுத்த அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : அப்படிப்பட்ட செயற் குறிப்பு தற்போது இல்லை.

திரு. கே. எ. வகாப் : அணுசக்தி மூலம் விதைக்கு ஊக்கம் அளிக்க ஆராய்ச்சி நடத்தப்படுவதாகச் சொன்னர்கள். அது போன்ற ஆராய்ச்சியை நடத்தியுள்ள நாடுகளில் அந்த விதைகளில் உண்டாகக்கூடிய தானியங்கள் மனிதனின் வாழ்க்கைக்குத் தகுந்தது அல்ல என்று முடிவு ஏற்பட்டிருப்பதாகத் தெரிகிறதே, அந்த ஆராய்ச்சிக் குறிப்புகள் நமக்குக் கிடைத்தனவா ? மேலும் ரசாயன உரங்கள் மூலம் உற்பத்தியாகிற தானியங்களே மனிதனது ஆரோக்கியத்திற்கு உகந்தது அல்ல என்கிற கருத்து பரவலாக இருக்கிறதே, அதைப்போக்க அரசு முயற்சி எடுக்குமா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : ரசாயன உரம் போடு வதன் மூலம் உற்பத்தியாகக் கூடியவைகள் மக்களுக்கு தீங்கு விளைவிக்கக்கூடியது என்கிற கருத்து அறவே நீக்கப்படவேண்டும். ஏனென்ருல் இப்படிப்பட்ட பூச்சி மருந்துகளை, ரசாயன உரங்களை நாம் பயன்படுத்தாவிட்டால் நாம் உற்பத்தியைப் பெருக்க முடியாது. ஆகவேதான் இப்படிப்பட்ட கருத்துக்களுக்கு இடமே கொடுக்கக்கூடாது. நமக்கு ரசாயன உரமும் வேண்டும், பூச்சி மருந்துகளும் வேண்டும்.

அடுத்தாற்போல டிராம்பே அணு ஆராய்ச்சியைப்பற்றிச் சொன்னர்கள். அவரை கொடியில் காய்க்கிறது என்ருலும் அது செடியிலே காய்க்க, அதற்கான விதை ஆராய்ச்சிகளை எல்லாம் புதிது புதிதாகச் செய்துகொண்டிருக்கிருர்கள். ஆயினும் அவை எல்லாம் இன்னும் ஆராய்ச்சிக் கட்டத்திலேயே இருக்கிறது. விதைகள் இன்னும் வழங்கப்படவில்லை.

Sindhi Bulls sold by Hosur Cattle Farm

* 498 *Q.*—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) the number of Sindhi Bulls sold at the District Livestock Farm, Hosur in Dharmapuri district in 1973;

(*b*) the price for which they were sold; and

(*c*) the reasons for their sale?

1973 நவம்பர் 30]

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: விடைகள் அடங்கிய விவர அறிக்கை @ ஒன்று மாமன்றத்தின் முன் வைக்கப் பட்டிருக்கிறது.

திரு. என். டென்னிஸ்: விவர அறிக்கையில் விலை உயர்ந்த சிந்து புல்சும், புல்லக்சும் பிற இடங்களுக்கு அனுப்பப்பட்டிருப்ப தாகத் தெரிகிறது. நம் மாநிலத்திலேயே வேறு எங்காவது வேண்டுமென்ற விண்ணப்பங்கள் வந்திருக்கின்றனவா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: கேள்வி சிந்து எருது களைப்பற்றியது. நம்மாநிலத்தைப் பொறுத்த வரையில் ஜெர்ஸி மாடுகள் விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

திரு. ஏ. சி. நரசிம்மன்: எத்தனை காளைகள் கொடுக்கப் பட்டிருக்கின்றன என்று சொன்னார்கள். எத்தனை சிந்து பசுக் கன்றுகள் விற்றிருக்கிறார்கள் என்பதை அரசு அறிவிக்குமா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: பசுக்களைக் கொடுப்பது இல்லை. பசுக்கள் ஆராய்ச்சி நிலையங்களில் இருந்தே மேலும் மேலும் கன்றுகளை ஈன்று அபிவிருத்தி செய்ய வைத்திருக் கிறோம்.

THIRU K. M. SUBRAMANIAM: Is it a fact, Sir, that 600 cows were imported from Australia and sold to a party in Salem district?

THE HON. THIRU Si. Pa. ADITANAR: Sir, I have no note on the subject before me. But I can say off-hand that such a thing could not have happened. How can the Government import 600 cows from Australia or England and hand them over to a private party? Such a thing could not have happened. I will investigate the matter. Perhaps, such a thing might have happened in the previous regime.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: துணைக் கேள்விகள் மூலக் கேள்விக்குத் தொடர்பு இல்லாமல் இருந்தால் அவற்றுக்கு அமைச்சர்கள் விடையளிக்காமல் இருப்பது நல்லது.

@ 284-ம் பக்கத்தில் இணைப்பு III ஆக அச்சிடப்பட்டுள்ளது.

திரு. எஸ். வடிவேல்: தஞ்சை மாவட்டத்தில் உம்பளச்சேரி இனம் என்று சொல்லக்கூடிய மாடுகள் உயர்ந்ததாக இருக்கிறதே, அந்த இனம் வளர்ச்சி அடைய ஆவன செய்ய முன்வருவார்களா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனுர்: அந்த மாட்டோடுகூட, ஜெர்சி இன காளைகளைச் சேர்த்து பால் கறக்கும் இனத்தைப் பெருக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. அவற்றை வேறு மாவட்டங்களுக்குக் கொடுப்பது பற்றி ஆராய்ந்தே சொல்ல முடியும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வி 521..

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: பேரவைத் தலைவர் அவர்களே, கேள்வி 521-இல் இருந்து ஒரு ஆறு கேள்விகள் ஒரே மாதிரியானவை. ஆகவே, அவைகளுக்குப் பதில் அளிப்பதற்கு முன்னுல் அந்தக் கேள்விகள் சம்பந்தமாக சில பொது விவரங்களைச் சொல்லிவிட்டு அந்தக் கேள்விகளுக்குத் தனித் தனியே பதில் அளிக்கலாம் என்று நினைக்கிறேன்.

ஊரகப் பகுதிகளில் சாலை வசதிகளைப் பெருக்கவேண்டும் என்பது அரசாங்கத்தின் குறிக்கோளாகும். இதை ஒரு குறிக் கோளாகக் கொண்டு 19 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 1,500-ம் அதற்கு மேற்பட்டுள்ள மக்கட்தொகைக் கொண்ட ஊரகப் பகுதிகளை பராமரிக்கப்படும் சாலைகளுடன் இணைக்கும் வகையில் புதிய சாலைகளைப் போடவும், தற்சமயம் இருக்கும் சாலைகளை மேம்பாடு செய்யவும் ஒரு சிறப்பு கிராமச்சாலைத் திட்டத்தை அரசு வகுத்துள்ளது. இத்திட்டம் வாய்ப்பான பல கட்டங்களில் செயல்படுத்தப்படும். இந்தத் திட்டத்தில் முதல் கட்டத்தில் 6 கோடி ரூபாய் செலவில் 281 கிலோ மீட்டர் நீளமுள்ள புதிய சாலைகளைப் போடவும், 1,427 கிலோ மீட்டர் நீளமுள்ள தற்போது உள்ள சாலைகளை மேம்பாடு செய்யவும் அரசு அங்கீகரித்துள்ளது. இரண்டாவது கட்டத்தில் 182 கிலோ மீட்டர் நீளமுள்ள புதிய சாலைகள் போடப்படும். 924 கிலோ மீட்டர் நீளமுள்ள புதிய சாலைகள் மேம்பாடு செய்யப்படும். இந்த இரண்டாவது கட்டத்தின் மதிப்பீடு ரூபாய் 5 கோடியாகும். 11 கோடி ரூபாய் செலவில் முதல் இரண்டு கட்டங்களையும் செயல்படுத்த வேலை களுக்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது. ஆனல் 1972-73-ஆம் ஆண்டில் ரூ. 3 கோடியும் 1973-74-ல் ரூ. 3 கோடியும்தான்

1973 நவம்பர் 30]

ஒப்புதல் அளித்துள்ள வேலைகளுக்குச் செலவு செய்யலாம் என்று அரசு வரையறுத்துள்ளது. இந்த ஒதுக்கீட்டில் செய்து முடிக்கப்படாத வேலைகள் "எஞ்சியுள்ள வேலைகள்" என்று கருதப் பட்டு பின்வரும் ஆண்டுகளில் எடுத்துக் கொள்ளப்பட்டு முடிக்கப் படும். இந்த இரண்டு கட்டங்களிலும் சேர்க்கப்படாதிருந்த 1,500-ம் அதற்கு மேற்பட்டுள்ள மக்கட்தொகையைக் கொண்ட ஊரகப் பகுதிகள், இந்தச் சிறப்புத் திட்டத்தின் பின்வரும் கட்டங்களில் எடுத்துக்கொள்ளப்பட்டு செயல்படுத்தப்படும். இத்திட்டத்தின் கீழ் முடிக்கப்படும் சாலை வேலைகள் பராமரிப்புக்கு நெடுஞ்சாலை கிராமப்பணித் துறையினரால் எடுத்துக் கொள்ளப்படும். வினா 522-ல் குறிப்பிட்டுள்ள களுகர் கடை சாலை மதுரை-மண்டபம் சாலையிலிருந்து பிரிந்து களுகர் கடை செல்கிறது. அதன் நீளம் 1.40 கி.மீ. அது சரளைகல் பரத்தி தார் சாலையாகப் போடப்படும்.

திருப்புவனம் ஒன்றியத்திலுள்ள சாலைகள்.

* 521. வினா—திரு. த. சோனையா: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா:

இராமநாதபுரம் மாவட்டம், திருப்புவனம் ஊராட்சி ஒன்றியம், பிரமனூர் தார்ச் சாலையாக மாற்றும் செயற் குறிப்பு அரசிடம் உண்டா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: இராமநாதபுரம் மாவட்டம், திருப்புவனம் ஊராட்சி ஒன்றியம், பிரமனூர் சாலையைத் தார்ச் சாலையாக மாற்றி, சீர் செய்ய அரசு 18—5—1973 நாளிட்ட ஊர் வளர்ச்சி உள்ளாட்சித் துறை எண் 1014-ல் ஆணை யிட்டுள்ளது.

* 522 வினா—திரு. த. சோனையா: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா—

இராமநாதபுரம் மாவட்டம், திருப்புவனம் ஊராட்சி ஒன்றியம், மதுரை-மண்டபம் நெடுஞ்சாலையில் இருந்து களுகர் கடை செல்லும் சாலையை தார்ச் சாலையாக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?